[2nd March 1964

விருத்தாசலம் அரசாங்க ஆஸ்பத்திரிகள்

*128 கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

விருத்தாசலம் டவுனில் உள்ள அரசாங்க ஆஸ்பத்திரியில் படுக்கைகளை அதிகப்படுத்த உத்தேசமுண்டா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இல்லை.

*129 கேள்வி.—திரு. இரா. நாராயணன் : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்திகிழ் தென்னுற்காடு மாவட்டம், விருத்தாசலம் வட்டம், திட்டக்குடி அரசினர் மருத்துவ மனையில் ஒரு ஆபரேஷன் தியேட்டரும், 24 படுக்கைகள் கொண்ட ஒரு வார்டும் கட்ட உத்தேசமுண்டா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : தற்போதைய தேசீய நெருக்கடி நிலை காரணமாக இத் திட்டம் தள்ளி வைக்கப் பட்டுள்ளது.

மாநிலத் திட்ட போர்டு

*130 கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை, திரு. கே. ஏ. மதியழகன் : } கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நம் மாநிலத்தில் ஒரு மாநில திட்ட போர்டு அமைக்க நம் அரசாங்கம் மத்திய அரசுக்கு தெரிவித்துள்ளதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இல்லை.

திரு. செ. மாதவன் : கனம் தலைவர் அவர்களே, நம்முடைய அரசாங்கம் இதுபற்றிய திட்டம் ஏதேனும் பரிசீலனையில் வைத்திருக்கிறதா ? அதன் விவரம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தக் கேள்வி 'மாநில திட்ட போர்டு அமைப்பதற்கு உத்தேசம் உண்டா ?' என்பது. நான் 'இல்லை' என்று பதில் சொன்னேன். நான் அன்று விளக்கியது போல, இங்கே வெவ்வேறு இலாகாக்கள், அவர்களைச் சேர்ந்த நிபுணர்கள் முதலியவர்களையெல்லாம் வைத்து முதலில் பரிசீலனை செய்கிறுர்கள், திட்டங்களை உருவாக்குகிறுர்கள். திட்டங்களை உருவாக்கிய பிறகு சேர்ந்து நாம் அவைகளைக் கவனிக்கிறேம். இந்தச் சட்டசபையில் கூட அதைப்பற்றி பரிசீலித்து ஆலோசிக்கிறேம். திட்டங்கள் உருவாக்கப்படுகின்றன, மத்திய ஆட்சியோடு சேர்த்து. நான் முன்பு கூறியதுபோல, தனியாக மாநிலத்திற்கு ஒரு திட்டம், தனியாக மத்திய ஆட்சிக்கு ஒரு திட்டம் என்பது அல்ல. இரண்டிற்கும் சேர்ந்து திட்டங்கள் தீட்டப் பட்டு உருவாக்கப்பட்ட பிறகு, ஸ்டேட் டெவலப்மெண்டு கமிட்டி